ஜர்மன் ஜனநாயகக் குடியரசு: (கிழக்கு ஜர்மனி) சித்திரை 22, 1961ம் ஆண்டு முடிவடைந்த முன்னைய ஒப்பந்தத்தினிடமாக, 1961ம் ஆண்டு மார்கழி மாதம் 14ம் திகதியில் புதிய வர்த்தக ஒழுங்கொன்று கடிதங்கள் பரிமாறுதல் மூலமாக ஜர்மன் ஜனநாயகக்குடியரசுடன் நிறைவேற்றப்பட்டது. ஏற்கத்தக்க தன்மைத்தான இப் புதிய ஒழுங்கு துவக்கத்திலே ஒரு ஆண்டிற்குச் செல்லுபடியாக விருந்ததாயினும் தன்னளவிலேயே மேலும் ஒவ்வொரு ஆண்டு காலப் பகுதிக்கும் நீடிக்கக் கூடியதாகவிருந்தது. இது, இரு நாடுகளுக்குமிடையில் பரிமாறுதலுக்குரிய பொருட்களின் திருத்தியமைக்கப்பட்ட பட்டியல்களுக்கும் இடமளித்தது. இலங்கை ஏற்றுமதிகளின் பட்டியல் அதின் சில புதிய கைத்தொழிற் பொருட்களையும் உள்ளடக்கும். இவ்வொழுங்கை அமுலுக்குக் கொண்டுவருவதால் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்வதற்குத் தேவையெனின் இரு நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்த ஒரு குழுவை நியமிப்பதற்கு இவ்வொழுங்கு இடமளித்தது. குறிப்பாக 1965ம் ஆண்டு வர்த்தக அபிவிருத்தியையே பற்றிய வேறு கடிதங்கள் பரிமாறப்பட்ட பிரதான கடிதங்களை நிவர்த்தி செய்தன.

## விலைவாசிகளும் கூலிகளும்

விலைவாசிகள்:

கொழும்புத் தொழிலாளர் வர்க்கக் குடும்பங்களின் வரவு செலவு சம்பந்தமாக வேறு குறிகாட்டிகள் இல்லாதமையினால், குடிசன மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களை அளவிடுவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. இக் குறிக்காட்டியில் உட்படும் பொருட்களின் அளவுப் பிரமாணங்கள் (கீழ்க்காணும் அட்டவணையின் ஓடைப் பிரிவுகளின் தலையில் உள்ள எண் தொகைகளைப் பார்க்கவும்) 1953ம் ஆண்டின் VIவது பருவப் பத்திரத்தின் சிபார்சுகளை ஆதாரமாகக் கொண்டவையாகும்.

பின்வரும் அட்டவணை, இந்நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் 1955ம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட மாற்றங்களைப் பொருட்களின்படியும், துறைகளின்படியும் பிரித்துக் காட்டுகின்றது.

அட்டவணை II இ—1

### கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி
### (1952=100)

| வருடம் | சகல விடயங்களும் | பொருட்களின்படி | | | | | துறைகளின்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு (61·9%) | உடை (9·4%) | எரி பொருள் விளக்கு (4·3%) | வாடகை (5·7%) | ஏனைய (18·7%) | உள்நாட்டுத் தொகுதி (51%) | இறக்குமதித் தொகுதி (44%) | ஏற்றுமதித் தொகுதி (5%) |
| 1955 .. | 100·5 | 105·1 | 80·5 | 102·3 | 101·5 | 94·6 | 98·4 | 102·8 | 102·2 |
| 1956 .. | 100·2 | 103·3 | 81·8 | 101·3 | 101·5 | 98·6 | 100·0 | 99·0 | 115·1 |
| 1957 .. | 102·8 | 104·9 | 84·4 | 97·3 | 101·5 | 106·9 | 104·9 | 98·1 | 126·8 |
| 1958 .. | 105·0 | 105·8 | 87·5 | 101·0 | 101·5 | 113·1 | 109·2 | 97·0 | 135·0 |
| 1959 .. | 105·2 | 104·7 | 92·1 | 102·4 | 101·5 | 115·3 | 108·0 | 97·1 | 153·1 |
| 1960 .. | 103·5 | 100·8 | 95·1 | 102·7 | 101·5 | 117·5 | 108·9 | 93·7 | 138·4 |
| 1961 .. | 104·8 | 99·8 | 103·9 | 104·4 | 101·5 | 122·8 | 112·3 | 94·6 | 119·1 |
| 1962 .. | 106·3 | 100·9 | 108·2 | 105·6 | 101·5 | 124·9 | 113·9 | 96·7 | 113·8 |
| 1963 .. | 108·8 | 103·0 | 118·2 | 103·0 | 101·5 | 126·6 | 113·4 | 102·5 | 117·7 |
| 1964 .. | 112·2 | 106·4 | 127·2 | 103·2 | 101·5 | 129·3 | 116·7 | 106·6 | 115·3 |

மூலங்கள்: குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், ஸ்ரீலங்கா மகாவங்கி

1964ம் ஆண்டில் நுகர்வோர் விலைகுறிகாட்டியில் ஏற்பட்ட மாதாந்த மாற்றங்கள், கீழ்க்காணும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை II இ—2

## நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் ஏற்பட்ட மாதாந்த மாற்றங்கள்

(அடி வருடம் 1952=100)

| மாதம் | சகல விடயங்களும் | | | இறக்குமதித் தொகுதி | | | உள்நாட்டுத் தொகுதி | | | ஏற்றுமதித் தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1963 | 1964 | மாற்றம் % | 1963 | 1964 | மாற்றம் % | 1963 | 1964 | மாற்றம் % | 1963 | 1964 | மாற்றம் % |
| தை .. | 107·1 | 111·2 | + 3·8 | 98·7 | 103·3 | + 4·7 | 112·4 | 117·5 | + 4·5 | 128·7 | 113·3 | —12·0 |
| மாசி .. | 107·8 | 111·5 | + 3·4 | 100·5 | 105·0 | + 4·5 | 112·5 | 116·5 | + 3·6 | 126·2 | 117·4 | — 7·0 |
| பங்குனி .. | 108·0 | 111·4 | + 3·2 | 101·8 | 106·7 | + 4·8 | 112·0 | 115·2 | + 2·9 | 123·9 | 114·7 | — 7·4 |
| சித்திரை .. | 109·1 | 112·1 | + 2·8 | 103·7 | 107·7 | + 3·9 | 112·6 | 115·4 | + 2·5 | 122·6 | 117·6 | — 4·1 |
| வைகாசி .. | 109·1 | 112·7 | + 3·3 | 103·3 | 107·4 | + 4·0 | 113·3 | 117·1 | + 3·4 | 118·1 | 114·9 | — 2·7 |
| ஆனி .. | 109·2 | 112·8 | + 3·3 | 103·3 | 107·3 | + 3·9 | 113·9 | 117·3 | + 3·0 | 113·9 | 115·2 | + 1·1 |
| ஆடி .. | 109·3 | 112·4 | + 2·8 | 104·8 | 107·3 | + 2·4 | 112·8 | 116·9 | + 3·5 | 113·1 | 111·3 | — 1·6 |
| ஆவணி .. | 108·4 | 112·0 | + 3·3 | 104·3 | 106·8 | + 2·4 | 111·8 | 116·4 | + 4·1 | 111·4 | 112·6 | + 1·1 |
| புரட்டாதி . | 108·0 | 112·1 | + 3·8 | 103·3 | 106·4 | + 3·0 | 111·6 | 116·9 | + 4·7 | 112·1 | 112·6 | + 0·4 |
| ஐப்பசி .. | 109·2 | 112·8 | + 3·3 | 102·2 | 106·9 | + 4·6 | 114·7 | 117·7 | + 2·6 | 114·2 | 114·7 | + 0·4 |
| கார்த்திகை . | 109·8 | 113·2 | + 3·1 | 102·1 | 107·6 | + 5·4 | 116·0 | 117·5 | + 1·3 | 113·4 | 118·3 | + 4·3 |
| மார்கழி .. | 110·3 | 112·4 | + 1·9 | 101·9 | 107·3 | + 5·3 | 117·1 | 116·1 | — 0·9 | 115·0 | 120·8 | + 5·0 |
| சராசரி .. | 108·8 | 112·2 | + 3·1 | 102·5 | 106·6 | + 4·0 | 113·4 | 116·7 | + 2·9 | 117·7 | 115·3 | — 2·0 |

மூலங்கள்: குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
ஸ்ரீலங்கா மகா வங்கி.

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின்படி கணிக்கப்பட்ட சில்லறை விலைகளின் மட்டம், 1963ம் ஆண்டில் இருந்ததைவிட 1964ம் ஆண்டில் சராசரியாக 3·1 சதவீதம் உயர்ந்திருந்தது. இவ்வுயர்வு, ஏற்றுமதித் தொகுதிப் பொருட்களின் குறிகாட்டியின் 2·0 சதவீத வீழ்ச்சியை மேலதிகமாக ஈடுசெய்யும்விதமாக அமைந்த இறக்குமதித் தொகுதிப் பொருட்களின் குறிகாட்டியின் 4·0 சதவீத அதிகரிப்பையும், உள்நாட்டுத் தொகுதிப் பொருட்களின் குறிகாட்டியின் 2·9 சதவீத அதிகரிப்பையும் பிரதிபலித்தது.

அட்டவணை II (இ) 1ல் உள்ள பொருட் தொகுதிக் குறிகாட்டிகளை, 1963ம் ஆண்டிலிருந்தவற்றுடன் ஒப்பிடுகையில், உணவும் பொருட் தொகுதி, உடை பொருட் தொகுதி எரிபொருள் விளக்கின் குறிகாட்டி, மற்றும் பலதரப்பட்ட பொருட்களின் குறிகாட்டிகள் ஆகியன 1964ம் ஆண்டில், முறையே, 3·3 சதவீதம் 7·6 சதவீதம், 0·2 சதவீதம், 2·1 சதவீதம் ஆகியவற்றால் உயர்ச்சியுற்றிருந்தன. வாடகைக்கான குறிகாட்டியில் மாற்றமொன்றும் பதியப்படவில்லை.

இறக்குமதி உணவுப் பொருட் தொகுதியிலே, 1964ம் ஆண்டில் விலை அதிகரிப்புகளைக் காட்டிய இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களுள் ஒடுக்கிய பால், வாசனைத் திரவியம், வெங்காயம், பம்பாய் வெங்காயம், பலசரக்கு, கருவாடு, முட்டை, உருளைக்கிழங்கு போல்வன சிலவாகும். உள்நாட்டு உணவுப் பொருட் தொகுதியிலே காய்கறிகளும் பழங்களும், தயாரிக்கப்பட்ட தேயிலையுடன் பாலும், வாயுப் பானங்களும், உள்நாட்டு முட்டைகளும் விலை அதிகரிப்புகளைக் காட்டின.

ஏற்றுமதி உணவுப் பொருட் தொகுதி, பெரும்பாலும் தேங்காயினதும், மிளகினதும் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக, 2·0 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. எனினும் எண்ணெய்களும் கொழுப்புகளும் ஏற்றுமதி உணவுப் பொருட் தொகுதியிலே, 1964ம் ஆண்டின் போது, உயர்ந்த விலைகளைப் பதிவு செய்தன.

உடை பொருட் தொகுதிக் குறிகாட்டி 1964ம் ஆண்டு முழுவதிலும், 1963ம் ஆண்டில் அது இருந்ததைவிட, நிலைபேருக உயர்ச்சியடைந்திருந்தது. பல தரப் பட்ட பொருட் தொகுதிக் குறிகாட்டியானது, பிரதானமாக சிகை அலங்காரத்தின தும் சலவைத் தொழிலினதும் சேவைகளுக்கான விலையில் அதிகரிப்புகள் ஏற்பட்ட மையினுல், 2·1 சதவீதத்தால் உயர்ச்சியுற்றது. மருந்துப் பொருட்களும் அதிகரித்த விலைகளைப் பதிவு செய்தன. புகையிலையின் மீதான தீர்வையில் 1963ம் ஆண்டு ஆவணி மாதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, 1964ம் ஆண்டு முழுவதிலும் உணரத் தக்கதாகவிருந்தது.

எரிபொருள் விளக்குத் தொகுதியின் குறிகாட்டியில் 0.2 சதவீதத்தைக் கொண்ட ஒரு கூருன அதிகரிப்பு ஏற்பட்டது. மண்ணெண்ணெயின் விலை, 1963ம் ஆண்டு ஆவணி மாதத்தில் அதன் மேலுள்ள தீர்வை குறைக்கப்பட்டதன் விளை வாக வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து, தீக்குச்சிகளினதும், விறகுகளினதும் விலை அதி கரிப்பினுல் மேலதிகமாக ஈடு செய்யப்பட்டது.

1964ம் ஆண்டின்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் கட் டுப்படுத்தவும், இதன் பொருட்டு வியாபாரிகளைக் கடுமையாக கண்காணிக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு: இறக்குமதியாளர்கள் தங்களது முழு அனுமதிப் பங்குகளையும் இறக்குமதி செய்து செயற்கையான தட்டுப்பாடுகளை உண் டாக்காதிருக்கும்படி வேண்டிக்கொள்ளப்பட்டதன் மூலம் தட்டுப்பாடுகளின் கார ணமாக விலைகளில் ஏற்படக்கூடிய எவ்வித கணிசமான அதிகரிப்பையும் தடுப்ப தற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. சந்தைத் திணைக்களத்தால் காய்கறிகளின் விலை களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள், எடுக்கப்பட்டன. அத்துடன் சந்தைத் திணைக்களத்தால் அது விலைப்படுத்தும் காய்கறிகளின் தொகையை அதிகரிப்பதற் கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிராமங்களிலும், நக ரங்களிலுமுள்ள அவற்றின் விற்பனை நிலையங்களை அதிகரிப்பதற்கு, ஊக்கமளிக்கப் பட்டுள்ளது.

மாட்டிறைச்சியைப் பொறுத்தமட்டில், தனிப்பட்ட மாட்டிறைச்சிச் சாலை வைத்திருப்பவர்களுக்குப் போட்டியாக மாட்டிறைச்சியைநியாய விலைகளில் விற்ப தற்கு சந்தைத் திணைக்களத்தால் கொழும்பு நகரத்திலே மாட்டிறைச்சிச் சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

நகரப் பிரதேசங்களிலே அதன் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை அதி கரித்திருந்த இலங்கை மீன் விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தால், அன்றுடம் பிடிக்கப் பட்ட மீன்களது விலையைக் குறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. மறு புறத்தில் அரசாங்கம், மீன் உற்பத்தியை அதிகரித்தற்கு மட்டுமன்றி, நுகர்வோ ருக்கு நியாயமான விலையிலும், மேலும் பயன்படத்தக்க முறையிலும் அது பங்கிட் டளிக்கப்படுவதை நிச்சயப்படுத்துதற்கும் ஓர் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தை நிறுவியது.

கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பங்கீட்டு முறைப்படி ஆடை வகைகளை விநி யோகிப்பதன் மூலம் அவற்றின் விலைகளைக் குறைந்த மட்டத்திலேயே வைத்திருப்ப தற்கு 1963ம் ஆண்டு முடிவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், 1964ம் ஆண்டின் போதும் தொடர்ந்து கையாளப்பட்டன. 1964ம் ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியின்போது பங்கீட்டுப் புத்தகம் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் நான்கு யார் துணி வழங்கப்பட்டது. இப் பங்கீடு அவ்வருடத்தின் இரண்டாவது அரை யாண்டின்போது 3 யார்களால் குறைக்கப்பட்டதெனினும், நீளத் துணிகளுக்கும் பட்டுத் துணிகளுக்கும் வெள்ளைத் துணிகளுக்குமான கொள்வனவுகளுக்கு 4 யார் பங்கீடு நிலையாக வைத்திருக்கப்பட்டது. 1964ம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்க ளின்போதும் ஆடை வகைகளின் விலைகள் தீட்சணமாக அதிகரித்தன. 1964ம் ஆண் டின் முதல் அரையாண்டின்போது ஏற்பட்ட அதிகரித்த இறக்குமதிகளின் காரண மாகவும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை எடுப்பதற்கு நடவடிக்கைகள் புகுத்தப்படலாமென ஆடிமாத முடிவில் கொண்டுவரப்பட்ட அறிவித்தலின் கார ணமாகவும், 1964ம் ஆண்டு ஆடிமாதத்தின் பின்னர் அதிகரித்த நிரம்பல்கள் காணப் பட்டன.

எனினும், பொருளாதாரத் துறையைப் பூரணமாக நோக்குமிடத்து, விலையில் ஏற்படும் மாற்றங்களுக்கு கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி ஒரு போதுமான அளவையாகாது என்பது கவனிக்கத்தக்கது. இக்குறிகாட்டி, கொழும்பிலுள்ள தொழிலாளர் வர்க்க நுகர்ச்சியின்பாற்படும் விடயங்களையே அடக்கியுள்ளது. மானியம் வழங்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட விடயங்களின் விலைகள் அல்லது கட்டுப்படுத்தப்பட்ட விடயங்களின் விலைகள் அல்லது கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு உட்படாத விடயங்கள் ஆகியன குறிகாட்டியில் ஒப்பியல்வாக கூடிய முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

## வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியில் உட்படாத விலைகள்

1964ம் ஆண்டில் வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியின் கீழ் அடங்காத முக்கிய பண்டங்களின் சில்லறை விலைகள் சம்பந்தமாக, ஓர் அளவை நடாத்தப்பட்டது. இவ் அளவையின் கீழ் வந்த பண்டங்களின் தொகுதிகள், கட்டட ஆக்கப் பொருட்கள், எண்ணெய்களும் வர்ணக் குழம்புகளும், வீட்டுத் தேவைகட்கான பொருட்கள். (நீண்ட காலப் பாவனை நுகர்ச்சிப் பொருட்களில் குறைவான காலப் பாவனைக் கேற்றனவும் அதிக காலப் பாவனைக் கேற்றனவும்) மோட்டார் துணைக்கருவிகள், வளமாக்கிகள் ஆகியனவாகும்.

### கூலிகள்:

1964ம் ஆண்டில் பெரும்பான்மையான தொழிலாளர்களின் அடிப்படைக் கூலி வீதங்களில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. சில துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன எனினும், அவை, வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இணங்க அதிகரித்த துணைச் சம்பளங்களாகவே இருந்தன. தொழிலாளர்களின் கூலி வீதங்களில் வருடாவருடம் ஏற்பட்ட மாற்றங்களை விளக்கும் குறிகாட்டிகள், ஆக அரசாங்க ஊழியர், அரசாங்கப்பாடசாலை ஆசிரியர், கூலி நிர்ணய சபை வாய்ந்த தொழில்களில் உள்ள தொழிலாளர் ஆகியோர் சம்பந்தப்பட்ட வரையிலுமே கிடைத்துள்ளன.

1955ம் ஆண்டிலிருந்து அரசாங்க ஊழியர், அரசாங்கப் பாடசாலை ஆசிரியர், ஆகியோரினது கூலி வீதங்களிலும், மெய்க்கூலி வீதங்களிலும் ஏற்பட்ட மாற்றங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. இவ் ஊழியர்களின் கூலி வீதங்களில் 1964ம் ஆண்டின்போது மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

அட்டவணை II இ—3

**அரசாங்க ஊழியர்களுக்கான கூலி வீதக் குறிகாட்டி எண்கள்**
**1952 = 100**

| காலம் | இலிகிதரும் தொழிற்பயிற்சி பெற்றோரும் | | சிறு சேவை ஊழியர் | | மத்திய அரசாங்க ஊழியர் (அ) | | அரசாங்க பாடசாலை ஆசிரியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி |
| 1955 .. .. .. | 106·9 | 106·4 | 110·4 | 109·9 | 108·7 | 108·2 | 110·2 | 109·7 |
| 1956 .. .. .. | 108·7 | 108·5 | 113·5 | 112·8 | 111·0 | 110·8 | 113·2 | 113·0 |
| 1957 .. .. .. | 111·2 | 108·2 | 116·0 | 112·8 | 113·8 | 110·7 | 113·9 | 110·8 |
| 1958 .. .. .. | 122·3 | 116·5 | 130·4 | 124·2 | 126·7 | 120·7 | 117·4 | 111·8 |
| 1959 .. .. .. | 122·3 | 116·3 | 130·4 | 124·0 | 126·7 | 120·4 | 117·4 | 111·6 |
| 1960 .. .. .. | 122·3 | 118·2 | 130·4 | 126·0 | 126·7 | 122·4 | 117·4 | 113·4 |
| 1961 .. .. .. | 122·3 | 116·7 | 130·4 | 124·4 | 126·7 | 120·9 | 117·4 | 112·0 |
| 1962 .. .. .. | 122·3 | 115·0 | 130·4 | 122·6 | 126·7 | 119·2 | 117·4 | 110·4 |
| 1963 .. .. .. | 122·3 | 112·4 | 130·4 | 119·9 | 126·7 | 116·5 | 117·4 | 107·9 |
| 1964 .. .. ., | 122·3 | 109·0 | 130·4 | 116·2 | 126·7 | 112·9 | 117·4 | 104·6 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

(அ) இலிகிதர், தொழிற் பயிற்சி பெற்றோர், சிறு சேவை ஊழியர் ஆகியோரை இணைத்துக் கணித்த குறிகாட்டி.

வரவு செலவுத் திட்ட உரையில் கொண்டுவரப்பட்ட ஓர் அறிவித்தலைத் தொடர்ந்து, அரைத் தேர்ச்சி பெற்றோரினதும் தேர்ச்சி பெறுதோரினதும் கூலி களின் வருடாந்த ஏற்றம் மாத மொன்றிற்கு ரூபா 1/–லிருந்து, 1964ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ம் திகதி முதல், மாதம் ஒன்றிற்கு ரூபா 2/50 சதங்களாக அதிகரிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பு வாழ்க்கைச் செலவிலும், வாடகைக் கூலிகளிலும் மாத மொன்றிற்கு ரூபா 1/50 சதங்கள் கொண்ட ஓர் அதிகரிப்பை விளைவிக்கும் என மதிப்பிடப்பட்டது. இத் தொகுதியிலுள்ள தொழிலாளர்களினது கூலிகளின் மொத்த அதிகரிப்பு, இரண்டாவது வருட சேவையின் போது மாதத்திற்கு ரூபா 4/- எனவும். இரண்டு வருட அல்லது அதற்கு மேற்பட்ட வருட காலம் சேவை செய்த வர்களுக்கு படிப்படியாக அதிகரித்த தொகைகள் எனவும் மதிப்பிடப்பட்டது. இத ஞல் ஏற்படும் நன்மை ஏறக்குறைய 90,000 அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கு மெனவும், அரசாங்கத்திற்கு இதனுல் 1964–65ல் 30 இலட்சம் ரூபாய்கள் செலவாகு மெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது இச் சம்பள ஏற்றங்களின் அதிகரிப்பு மேலே காட்டப்பட்டுள்ளது. அட்டவணையின் குறிகாட்டியில் பிரதிபலிக்கப்படவில்லை. இது ஏனெனில், குறிகாட்டிஆரம்பச் சம்பளத்தையும், கூலி அளவுகளையும் கணக்கெடுக்க மட்டுமே பாவிக்கப்படுகின்றது. இக்குறிக்காட்டி சம்பள ஏற்றங்களையோ அல்லது சம்பளத்தினதும் கூலியினதும் ஆகக் கூடிய அளவுகளின் மாற்றங்களையோ உட்படுத்தக் கூடியதாக உபயோகப்படுத்தப்படவில்லை

தனியார் துறையிலுள்ள கூலி வீதங்களின் நடமாட்டங்கள் பற்றிக் கிடைக்கக் கூடிய விபரங்கள், கூலி நிர்ணயசபை அமைக்கப்பட்ட துறைகளில் உள்ள தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவையாகவே மட்டும் உள்ளன. இக்கூலி நிர்ணய சபையின் கண்காணிப்பின் கீழ் உள்ள தொழிலாளர்களுள், 89·4 சதவீதமானேர் விவசாயத் தொழிலாளர்களாகும்.

1955ம் ஆண்டிலிருந்து, கூலி நிர்ணயசபை வாய்ந்த தொழில்களில் உள்ள தொழிலாளரின் கூலி வீதங்களினதும், மெய்க்கூலி வீதங்களினதும் நடமாட்டங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II இ—4

## கூலி நிர்ணய சபையிலுள்ள தொழில்களில் உள்ள தொழிலாளர்களின் கீழ்மட்டக் கூலிவிகிதக் குறிகாட்டி எண்கள்

| காலம் | விவசாயத் தொழிலாளர் | | கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளர் | | கூலி நிர்ணயசபை வாய்ந்த தொழில்களில் உள்ள சகல தொழிலாளர்களும் (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | கீழ்மட்டக் கூலிக் குறிகாட்டி | மெய்க்கூலிக் குறிகாட்டி | கீழ்மட்டக் கூலிக் குறிகாட்டி | மெய்க்கூலிக் குறிகாட்டி | கீழ்மட்டக் கூலிக் குறிகாட்டி | மெய்க்கூலிக் குறிகாட்டி |
| 1955 .. .. | 106·6 | 106·1 | 101·4 | 101·0 | 105·9 | 105·4 |
| 1956 .. .. | 107·1 | 106·9 | 102·9 | 102·7 | 106·4 | 106·2 |
| 1957 .. .. | 108·7 | 105·6 | 104·5 | 101·5 | 107·8 | 104·7 |
| 1958 .. .. | 110·2 | 105·2 | 116·1 | 110·9 | 110·8 | 105·6 |
| 1959 .. .. | 110·2 | 104·8 | 128·8 | 122·4 | 112·3 | 106·7 |
| 1960 .. .. | 110·2 | 106·5 | 128·1 | 123·8 | 111·8 | 108·0 |
| 1961 .. .. | 110·7 | 105·6 | 128·4 | 122·5 | 112·3 | 107·2 |
| 1962 .. .. | 111·9 | 105·2 | 129·5 | 121·8 | 113·7 | 106·9 |
| 1963 .. .. | 113·3 | 104·2 | 130·9 | 120·3 | 115·2 | 105·9 |
| 1964 .. .. | 116·0 | 103·5 | 132·8 | 118·4 | 117·8 | 105·0 |

மூலங்கள்: குடிசனமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
ஸ்ரீலங்கா மகாவங்கி.

(அ) விவசாயத் தொழிலாளர்கள், கைத்தொழில், வர்த்தகத் தொழிலாளர்கள் ஆகியோரை இணைத்துக் கணித்த குறிகாட்டி.

1963ம் ஆண்டிலிருந்தவற்றைவிட 1964ம் ஆண்டில், விவசாயத் தொழிலாளர்களின் கூலி வீதங்கள் 2·4 சதவீதத்தாலும், கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளர்களின் கூலி வீதங்கள், 1·5 சதவீதத்தாலும் உயர்ந்து இருந்தன. இக்கூலி வீதங்களின் உயர்ச்சி, வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி உயர்ந்ததைத் தொடர்ந்து அவர்களது துணைச் சம்பளங்கள் அதிகரித்ததனுல் மட்டுமே உண்டாகியது. எனினும் இவ்வதிகரித்த துணைச் சம்பளங்கள், வாழ்க்கைச் செலவுகளின் உயர்ச்சி முழுவதையும் ஈடு செய்வனவாக அமையவில்லை.

## (ஈ) வேலை நிலையும் தொழில் உறவுகளும்

வேலை நிலை:

வருடாந்த மொத்தத் தரவுகள் இல்லாதமையினுல், நாட்டிலுள்ள வேலையின்மையின் வருடாந்த நடமாட்டங்களை ஓரளவில் அறிவதற்கு, தொழில் இணைப்புக் காரியாலயங்களிற் பதிவுபட்டோரின் எண்ணிக்கை பற்றிய தரவுகள், உதவுகின்றன. 1963ம் ஆண்டு முடிவின்போது, தொழில் இணைப்புக் காரியாலயங்களிற் பதிவுபட்டோரின் எண்ணிக்கை, கடந்த வருட முடிவிலிருந்ததிலும் பார்க்க 0·2 சதவீதம் குறைவாக இருந்தது. 1964ம் ஆண்டின் மூன்ரும், நான்காம் காற்பகுதிகளின் போது இவ்வெண்ணிக்கைகள் நிதானமாக அதிகரித்தன. எனவே இப்பதிவுபட்டோரின் எண்ணிக்கையானது, 1963ம் ஆண்டு மார்கழி மாத முடிவிற்குரிய எண்ணிக்கையாகிய 151,922 உடன் ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டு மார்கழி மாத முடிவின்போது 165, 456 ஆக இருந்தது. நடைமுறை வருடத்தின்போது, தொழில் நுட்பப் பயிற்சி பெற்ருேர், இலிகிதர் ஆகிய பதிவாளர்களின் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டதனுல் 1964ம் ஆண்டு முடிவின்போது, இப்பதிவாளர்களின் எண்ணிக்கை, 1963ம் ஆண்டு மார்கழி மாத முடிவிலிருந்ததிலும் பார்க்க 14·7 சதவீதம் கூடியதாக இருந்தது. தேர்ச்சி பெற்ருேர், அரைத்தேர்ச்சி பெற்ருேர், தேர்ச்சி பெருதோர் ஆகிய பதிவாளர்களின் எண்ணிக்கைகள், 1963ம் ஆண்டு மார்கழி மாத முடிவிலிருந்தவற்றைவிட முறையே, 8·2 சதவீதத்தாலும், 5·3 சதவீதத்தாலும், 7·9 சதவீதத்தாலும் அதிகரித்தன. அரசாங்கத் துறை, ஓரளவு அரசாங்க ஆதிக்கமுள்ள கூட்டுத்தாபனங்கள், தனிப்பட்டோர் துறை ஆகியவற்றில் 1964ம் ஆண்டு உண்டாக்கப்பட்ட வேலைகள் சம்பந்தமான முழுத் தரவுகளும் கிடைக்கவில்லை.

கடந்த சில ஆண்டுகளில் வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையையும், ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள பதிவாளர்களின் மொத்த எண்ணிக்கையில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் சதவீதத்தையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II ஈ—1

### தொகுதிப்படி வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும், பதிவு செய்தோரின் மொத்த எண்ணிக்கையில், இவர்களின் சதவீதமும்

| வருடம் | தொழில் நுட்பப் பயிற்சி பெற்ருேரும் இலிகிதரும் | % | தேர்ச்சி பெற்ருேர் | % | அரைத் தேர்ச்சி பெற்ருேர் | % | தேர்ச்சி பெருதோர் | % | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1955 | 2,166 | 14·9 | 1,064 | 12·5 | 1,187 | 5·9 | 3,791 | 13·6 | 8,208 | 11·6 |
| 1956 | 1,913 | 11·9 | 845 | 8·6 | 1,565 | 6·1 | 4,162 | 12·1 | 8,485 | 9·9 |
| 1957 | 1,176 | 6·3 | 709 | 5·3 | 1,180 | 3·8 | 3,053 | 6·4 | 6,118 | 5·5 |
| 1958 | 1,827 | 9·2 | 800 | 5·9 | 1·006 | 3·1 | 2,251 | 4·4 | 5,884 | 5·0 |
| 1959 | 1,667 | 8·0 | 1,045 | 7·5 | 1,275 | 3·8 | 3,218 | 5·4 | 7,205 | 5·6 |
| 1960 | 1,400 | 5·3 | 771 | 4·6 | 1,247 | 3·6 | 4,744 | 6·5 | 8,162 | 5·4 |
| 1961 | 1,259 | 4·6 | 631 | 3·5 | 964 | 2·8 | 2,794 | 3·9 | 5,648 | 3·7 |
| 1962 | 1,263 | 3·7 | 468 | 2·7 | 809 | 2·3 | 2,315 | 3·5 | 4,857 | 3·2 |
| 1963 | 1,322 | 3·7 | 502 | 3·0 | 839 | 2·3 | 2,466 | 3·9 | 5,129 | 3·4 |
| 1964* | 1,722 | 4·2 | 535 | 3·0 | 945 | 2·5 | 3,599 | 5·3 | 6,801 | 4·1 |

மூலம்: தொழிற் திணைக்களம்

* தற்காலிகமானவை.